| | | |
|---|---|---|
| **O.S No.** | : | 71/2021 |
| **DATE** | : | **26.02.2026** |
| **பெயர்** | : | **ஆனந்தன்** |
| **தந்தை பெயர்** | : | **விஜயராகவன்** |

<u>பிரதிவாதி தரப்பு வா.சா.1 குறுக்கு விசாரணை</u>

1. பிரதிவாதிகள் தற்போது வாங்கியுள்ள சொத்து ஆதியில் ராமு என்பவருக்கு சொந்தமானது. நான் தாவா சொத்தை வாங்கியதற்கு பிறகு தான் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்தார்கள். நான் எனது பிராதில் பத்தி 5ல் பிரதிவாதிகள் ஆக்கிரமித்தது பற்றி ராமுவிடம் சொல்லியதாக குறிப்பிட்டிருந்தால் அது தவறு என்றால் நான் ஏன் ராமுவிடம் சொல்ல வேண்டும் ஊர் பஞ்சாயத்தாரிடம் தெரிவித்தேன். நான் 2018ல் தாவா சொத்தை வாங்கினேன். பிரதிவாதிகள் எப்போது சொத்தை வாங்கினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் 2021ல் கட்டிடத்தை கட்டினார்கள். பிரதிவாதிகள் கட்டிடம் கட்டியதால் அவர்களின் நாராசத்திற்கே பிரச்சனை ஏற்படும் என்று நான் அவர்களிடத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

2. நான் எனது பிராதில் பிரதிவாதிகளுக்கு பொது வழி இல்லை என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் ஆனால் தற்போது கட்டிடம் கட்டிவிட்டார்கள் என்று சொல்கிறேன் எது சரி என்றால் பிரதிவாதிகள் அவர்களது பொது வழியையும் சேர்த்து கட்டிடம் கட்டிவிட்டார்கள் என்னுடைய வழியையும் ஆக்கிரமிப்பு செய்துவிட்டார்கள்.

**கற்றறிந்த பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

FANNY RAJAN

Principal District Munsif, Kancheepuram

Digitally signed by FANNY RAJAN